**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 388/2012**

2025–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 13–ஆம் நாள் வெள்ளிக் கிழமை **பி.வா.சா.1.** (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பாலமுருகன், மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | வயது | : |
| த/பெ | : தம்புசாமி | தொழில் | : |
| கிராமம் | : | மாவட்டம் | : |
| வட்டம் | : | | |

---

<u>பி.வா.சா. 1–ன் முதல் விசாரணை</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 27.01.2012 ஆம் தேதியில் 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் குறித்து எனக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 27.12.2011 தேதியிட்ட தாவா சொத்துக்கள் குறித்து 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா (எண்.459) (கணினி நகல்) **பி.வா.சா.ஆ.5** ஆகவும், 11.10.2012 தேதியிட்ட தாவா சொத்துக்கள் குறித்து எனது பெயரில் உள்ள பட்டா (பட்டா எண்.2229) (கணினி நகல்) **பி.வா.சா.ஆ.6** ஆகவும், 11.10.2012 ஆம் தேதியில் தாவா சொத்துக்கள் குறித்து நான் செலுத்திய தீர்வை ரசீது அசல் **பி.வா.சா.ஆ.7** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. தாவா தள்ளுபடியாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

ஒப்பம்/–திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.